பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 06 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மண் வளத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய அளவிலான விழிப்புணர்வு இயக்கம் இன்று தொடங்குகிறது.

2. மேற்குவங்கத்தில் திரு. சுவேந்து அதிகாரி தலைமையிலான அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்படுகிறது.

3. மகாராஷ்டிராவில் 17 சட்ட மேலவை இடங்களுக்கான தேர்தலில், ஆளும் 'மகாயுதி' கூட்டணியின் தொகுதிப்பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது.

4. ஈரானுடன் மேற்கொள்ளப்பட உள்ள இருதரப்பு ஒப்பந்தத்தில் அணு ஆயுதக் கட்டுப்பாடுகள் குறித்த அம்சங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

5. தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மண் வளத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய அளவிலான விழிப்புணர்வு இயக்கம் இன்று தொடங்குகிறது.

மத்தியப்பிரதேச மாநிலம் ராய்சென் மாவட்டத்தில் இதனை மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் தொடங்கி வைக்கிறார்.

இத்திட்டத்திற்கு அனைத்து மாநில அரசுகளும், யூனியன்பிரதேசங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இத்திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக நேற்று காணொலி வாயிலாக அவர் வேளாண் அறிவியல் மையங்கள், வேளாண் ஆராய்ச்சி மன்றங்கள், வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் மத்திய மாநில அரசின் வேளாண் துறை உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

மாநில முதலமைச்சர்களின் ஒத்துழைப்பை கோருவதற்காக அவர்களுடன் தாம் தொலைபேசியில் பேசியதாகவும் அவர் தெரிவித்தார்.

மண்வள பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு இயக்கம், அன்னை பூமியை பாதுகாப்பதோடு, விவசாயத்தின் எதிர்காலத்தையும் பாதுகாக்கும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

கர்நாடக மாநிலத்தின் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்க உள்ள திரு. டி.கே. சிவக்குமார் மற்றும் இடைக்கால முதலமைச்சர் திரு. சித்தராமையா ஆகியோர், புதிய அமைச்சரவை குறித்து தில்லியில் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களைச் சந்தித்துப் பேச உள்ளனர்.

இதற்காக இரு தலைவர்களும் பெங்களூருவில் இருந்து தில்லி விரைந்துள்ளனர்.

அவர்களுடன் திரு. சித்தராமையாவின் மகனும், மாநில சட்ட மேலவை உறுப்பினருமான திரு. யதீந்திராவும் டெல்லி சென்றுள்ளார்.

திரு. டி.கே. சிவக்குமாரின் புதிய அமைச்சரவையில் திரு. யதீந்திராவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், முந்தைய அமைச்சரவையில் இருந்த சிலருக்குப் பதிலாக, இந்த முறை புதிய முகங்களுக்கு அதிக வாய்ப்பளிக்கப்படும் என தெரிகிறது.

இதற்கிடையே, தற்போதைய மாநில காங்கிரஸ் தலைவர் திரு. டி.கே. சிவக்குமார் முதலமைச்சராகப் பதவியேற்க உள்ளதால், புதிய

தலைவரை நியமிக்க காங்கிரஸ் பரிசீலித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் திரு. சுவேந்து அதிகாரி தலைமையிலான அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்படுகிறது.

புதிதாக 35 பேர் அமைச்சர்களாக பதவியேற்க உள்ளனர்.

மாநில தலைமைச் செயலகமான Nabanna-வில் இன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ள பதவியேற்பு விழாவில் அமைச்சர்களுக்கு மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு உறுதிமொழியும் செய்து வைக்கிறார்.

இதனை சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி, மேற்குவங்க மக்கள் அளித்த தீர்ப்பின்படி புதிய அரசின் முழுமையான அமைச்சரவை இன்று அமைய உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் காலியாக உள்ள 17 சட்ட மேலவை இடங்களுக்கான தேர்தலில், ஆளும் 'மகாயுதி' கூட்டணியின் தொகுதிப்பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டின்படி, பிஜேபி 11 இடங்களிலும், சிவ சேனா 4 இடங்களிலும், தேசியவாத காங்கிரஸ் கட்சி 2 இடங்களிலும் போட்டியிடவுள்ளன.

மறுபுறம், எதிர்க்கட்சியான மகா விகாஸ் அகாடி கூட்டணி மொத்தம் உள்ள 17 இடங்களில் 15 இடங்களுக்கான தொகுதிப் பங்கீட்டை ஏற்கனவே அறிவித்துள்ளது.

இதன்படி காங்கிரஸ் 8 இடங்களிலும், சிவசேனா உத்தவ் தாக்ரே பிரிவு 4 இடங்களிலும், திரு. சரத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் 3 இடங்களிலும் போட்டியிடுகின்றன.

மீதமுள்ள நாசிக் மற்றும் நாந்தேட் ஆகிய இரண்டு இடங்களுக்கான பேச்சுவார்த்தை இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்ய இன்று இறுதி நாளாகும்.

இதற்கிடையில், சிவசேனா உத்தவ் தாக்ரே பிரிவு கட்சி தனது வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

<<<<>>>>

திரிபுரா மாநிலத்தில் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் செயல்படுத்துமாறு மாநில அரசை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மின்திட்டங்கள் தொடர்பாக நேற்று மத்திய எரிசக்தி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர்லால், தலைநகர் அகர்தலாவில் மாநில முதலமைச்சர் திரு. மாணிக் சாஹா மற்றும் அமைச்சர்களுடன் ஆய்வு நடத்தினார்.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை ஆய்வு செய்த அவர், அதனை விரைவாக செயல்படுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அடுத்த ஆண்டு ஜூலை மாதத்திற்குள் இப்பணிகள் முடிவடையும் என்று மாநில அரசின் சார்பில் இந்தக் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் நேற்று மலைப் பகுதியில் சுற்றுலா வாகனம் பள்ளத்தில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் ஓட்டுநர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

அவர்கள் பயணம் செய்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து ஆழமான பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததே இந்த விபத்திற்குக் காரணமாகும்.

இந்த விபத்து, சம்பா மாவட்டத்தின் தொலைதூரப் பகுதியான **Churah-**வில் நிகழ்ந்தது.

உயிரிழந்தவர்களில் 7 பேர் சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் என்றும், மற்றொருவர் அந்த வாகனத்தின் ஓட்டுநர் என்றும் மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

மியான்மரின் வடகிழக்கு பகுதியில் உள்ள ஒரு கட்டிடத்தில் நேரிட்ட பயங்கர வெடிவிபத்தில், 45க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

சுரங்கப் பணிகளுக்காக வெடிபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே இந்த விபத்து நேரிட்டுள்ளதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் சுமார் 70 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்து நடந்த பகுதியில் மீட்புப் பணிகள் தற்போது மிக தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

<<<<>>>>

ஈரானுடன் மேற்கொள்ளப்பட உள்ள இருதரப்பு ஒப்பந்தத்தில் அணு ஆயுதக் கட்டுப்பாடுகள் குறித்த அம்சங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்த அம்சங்கள் தெளிவற்றதாக இருப்பதாக வெளியான செய்திகளுக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் கட்டமைப்பு, டெஹ்ரான் நிர்வாகம் அணு ஆயுத வல்லமையை பெறுவதை முற்றிலும், திட்டவட்டமாகத் தடை செய்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

ஈரான் ஒருபோதும் அணு ஆயுதத்தையோ அல்லது அணுகுண்டையோ வைத்திருக்கக் கூடாது என்று ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

பிரான்ஸ் முழுவதும் கால்பந்து ரசிகர்களுக்கும் போலீசாருக்கும் இடையே ஏற்பட்ட கடுமையான மோதல்களில் **219** பேர் காயமடைந்தனர் மற்றும் **780-**க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட்டில் நடைபெற்ற சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப்போட்டியில் ஆர்சனல் அணியை வீழ்த்தி பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி சாம்பியன் பட்டம் வென்றது.

இதையடுத்து பிரான்சில் இரு கால்பந்து அணியின் ரசிகர்களிடையே மோதல் ஏற்பட்டது.

நிலைமையைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரான்ஸ் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கேரளா, குஜராத், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், ஒடிசா மாநிலங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மத்திய மஹாராஷ்டிரா, ஒடிசா மற்றும் மேற்கு மத்தியப்பிரதேசத்தின் சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய ஆலங்கட்டி மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லி, பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், ஹிமாச்சலப்பிரதேசம், பிஹார், ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்கு ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் அடுத்த **2** நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தெலங்கானா, கொங்கன், கோவா, சௌராஷ்டிரா, கட்ச், மேற்குவங்கம், சிக்கிம், அந்தமான் நிகோபார் தீவுகள் ஆகிய பகுதிகளில் நாளை வரை இதேநிலை நீடிக்க வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அரபிக் கடலின் தெற்கே தென்கிழக்குப் பகுதியில் லட்சத்தீவுகள், கேரளம், தமிழகத்தின் சில பகுதிகளில் அடுத்த **4** முதல் **5** நாட்களுக்குள் தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கான சாதகமான சூழ்நிலை நிலவுவதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா **3-0** என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

கோவாவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் ஆட்டத்தின் தொடக்கம் முதலே இந்தியா ஆதிக்கம் செலுத்தியது.

இந்திய அணியின் சார்பில் **Pyari Xaxa, Lynda Kom, Malavika** ஆகியோர் கோல் அடித்தனர்.

------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி **5** விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்று தொடர்ந்து இரண்டாவது முறையாக கோப்பையை கைப்பற்றியது.

அகமதாபாதில் நேற்றிரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் விளையாடிய குஜராத் அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **8** விக்கெட் இழப்புக்கு **155** ரன் எடுத்தது.

ரஷீத் சலாம் **3** விக்கெட்டுகளையும், புவனேஷ்வர் குமார், ஹேசில்வுட் ஆகியோர் தலா **2** விக்கெட்டுகளையும், க்ருணால் பாண்ட்யா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

**156** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி **18** ஓவரில் **5** விக்கெட் இழப்புக்கு **161** ரன் எடுத்து வெற்றி பெற்றது.

துவக்க ஆட்டக்கார்களில் ஒருவரான விராட் கோலி **42** பந்துகளில் **75** ரன் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஆட்டநாயகன் விருது விராட் கோலிக்கும், தொடர் நாயகன் விருது வைபவ் சூர்யவன்ஷிக்கும் வழங்கப்பட்டது.

ஒட்டுமொத்த அணியினரின் சிறப்பான பங்களிப்பே இந்த வெற்றிக்கு காரணம் என்று செய்தியாளர்களிடம் பேசிய விராட் கோலி கூறினார்.

இதன் காரணமாகவே லீக் சுற்றிலேயே பெங்களூரு அணி புள்ளிப் பட்டியலில் முதலிடம் பெற்றதாகவும், இக்கட்டான சூழ்நிலையை அணியில் இடம்பெற்றிருந்த அனைத்து வீரர்களும் சிறப்பாக கையாண்டதால் இறுதிப் போட்டியிலும் வெற்றி பெற முடிந்ததாக அவர் தெரிவித்தார்.

மும்பை அணிக்கு எதிராக ராய்ப்பூரில் குறைந்த ரன் வித்தியாசத்தில் கிடைத்த வெற்றி அணிக்கு மீண்டும் பெரும் நம்பிக்கையை அளித்ததென்றும் விராட் கோலி கூறினார்.

**<<<<The End>>>>**